# நோயாளியின் தகவல் லீப்லேட்

# கேவிஸ்கான் பெப்பெர்மிண்ட் லிகுய்ட்

**சோடியம் அல்ஜினேட், சோடியம் பைகார்போனேட், கால்சியம் கார்போனேட்**

இந்த மெடிசின்ஜ உட்கொள்வதற்கு முன் இந்த லீப்லேட்ஜ கவனமாக படிக்கவும். உங்களுக்கு எதுவும் உறுதியாக தெரியவில்லை என்றால், உங்கள் பார்மசிஸ்ட் அல்லது டாக்டரிடம் கேளுங்கள்.

## கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட் என்றால் என்ன மற்றும் அது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட் 'ரிஃப்ளக்ஸ் சப்ரஸண்ட்ஸ்' எனப்படும் மெடிசின்களின் குழுவைச் சேர்ந்தது, இது வயிற்றின் உள்ளடக்கத்தின் மேல் ஒரு பாதுகாப்பு அடுக்கை உருவாக்கி , வயிற்றில் இருந்து ஃபுட் பைப்பிற்கு வெளியாகும் ஆசிட் ஐ கட்டுப்படுத்தி அதனால் ஏற்படும் வலி மற்றும் அசௌகரியத்தை தடுக்கிறது.

கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட் ஆசிட் ரிகுர்கிடேஷன், நெஞ்செரிச்சல் மற்றும் இண்டைஜெஸ்சன் போன்ற காஸ்ட்ரோ- ஈஸோஃபாகியல் ரிஃப்ளக்ஸ் சிம்ப்டம்ஸ்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது, எடுத்துக்காட்டாக, உணவு உட்கொண்ட பிறகு அல்லது கர்ப காலத்தின் போது.

## கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட்ஜப் பயன்படுத்துவதற்கு முன்:

**பின்வரும் சந்தர்ப்பங்களில் இந்த தயாரிப்பை எடுக்க வேண்டாம்:**
ஏதேனும் ஒரு இங்கிரிடியன்ட்ஸ்களுக்கு உங்களுக்கு அலர்ஜி இருப்பது உங்களுக்குத் தெரிந்தால். மிகவும் அரிதாகவே சுவாசிப்பதில் சிரமம் மற்றும் தோல் தடிப்புகள் ஏற்பட்டுள்ளது (முழு இங்கிரிடியன்ட்ஸ் பட்டியலுக்கு கூடுதல் தகவலைப் பார்க்கவும்).

**கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட் சிகிச்சைக்கு முன் சிறப்பு கவனம் செலுத்துங்கள்:**
உங்களுக்கு நீண்ட காலத்திற்கு இந்த தயாரிப்பு தினசரி அடிப்படையில் தேவைப்பட்டால், உங்கள் டாக்டர் அல்லது பார்மசிஸ்ட்டிடம் பேசுங்கள், குறிப்பாக நீங்கள் உணவில் உப்பை கட்டுப்படுத்த பின்பற்ற அறிவுறுத்தப்பட்டிருந்தால் (எ.கா., சில சந்தர்ப்பங்களில் கஞ்சேஷ்டிவ் ஹெர்ட்பைலியர், கிட்னி ப்ரோப்லேம்ஸ், ஹை பிளட் பிரஷர் மற்றும், பாதம், கணுக்கால், கால்கள், உடல் வீக்கம் போன்றவை).

ஹை பிளட் கால்சியம் அளவுகள், கிட்னிகளில் கால்சியம் சுமை அல்லது மீண்டும் மீண்டும் கால்சியம் கொண்ட கிட்னி ஸ்டோன்ஸ் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்தால் கவனமாகப் பயன்படுத்தவும்.

இந்த தயாரிப்பில் மெத்தில் மற்றும் புரோபில் பாராஹைட்ராக்சிபென்சோயேட்டுகள் உள்ளன, அவை அலர்ஜி எதிர்வினைகளை ஏற்படுத்தலாம் (தாமதமாகலாம்).

நீங்கள் கர்ப்பமாக இருந்தால் அல்லது தாய்ப்பால் கொடுப்பவராக இருந்தால் இந்த தயாரிப்பை எடுத்துக் கொள்ளலாம்.

**மற்ற மருந்துகளை எடுத்துக்கொள்வது:**

மற்ற மருந்துகளை வாய்வழியாக எடுத்துக் கொண்ட இரண்டு மணி நேரத்திற்குள் இந்த தயாரிப்பை உட்கொள்ள வேண்டாம், ஏனெனில் இது வேறு சில மருந்துகளின் செயலில் தலையிடலாம். நீங்கள் ஆன்டிஹிஸ்டமின்கள், ஆன்டிபையாட்டிக்ஸ் (டெட்ராசைக்ளின்கள் மற்றும் நோர்ஃப்ளோக்சசின் போன்ற குயினோலோன்கள்), ஐயன் பிரேபரேஷன், கீடாகோணாசோல் போன்ற ஆண்டிப்பியுங்கல் மருந்துகள், டிஜாக்சின் மற்றும் பீட்டா பிளாக்கர்ஸ் (இதய கோளாறுகளுக்கு), பென்சிலமைன் (பொதுவாக ருமட்டாய்டு ஆர்த்ரிட்டிஸ்), குளுக்கோகார்டிகாய்டு (இன்ஃப்ளமேட்டரி மற்றும் ஆட்டோ இம்யூன் கோளாறுகளுக்கு), நியூரோலெப்டிக்ஸ் (மனநோய்க்கு), தைராய்டு ஹார்மோன்கள், குளோரோகுயின் (மலேரியாவுக்கு), எஸ்ட்ராமுஸ்டைன் (புரோஸ்டேட் கான்செர்ருக்கு) மற்றும் பிஸ்பாஸ்போனேட்டுகள் (ஆஸ்டியோபோரோசிஸுக்கு).

## கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட் ஐ எப்படி எடுத்துக்கொள்வது?

இந்தத் தயாரிப்பைப் பயன்படுத்துவதற்கு முன், காப் சீல் உடைக்கப்படாமல் உள்ளதா என்பதை முதலில் சரிபார்க்கவும். வாய்வழி பயன்பாட்டிற்கு மட்டும். பயன்படுத்துவதற்கு முன் நன்கு குலுக்கவும்.

**12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்கள்:**

10-20 மிலி உணவுக்குப் பிறகு மற்றும் படுக்கை நேரத்தில் அல்லது பிசிசியன் பரிந்துரைத்தபடி எடுத்துக் கொள்ளுங்கள்.

**12 வயதுக்குட்பட்ட குழந்தைகள்:**

மெடிக்கல் ஆலோசனையின் பேரில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

நீங்கள் இந்த தயாரிப்பை அதிகமாக எடுத்துக் கொண்டால், உங்கள் வயிறு வீங்கியதாக உணரலாம் மற்றும் சில வயிற்று அசௌகரியங்களை அனுபவிக்கலாம். இது உங்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க வாய்ப்பில்லை, ஆனால் தயவுசெய்து உங்கள் டாக்டர் அல்லது பார்மசிஸ்ட்டை அணுகவும்.

நீங்கள் ஒரு வேளை மருந்தை மறந்துவிட்டால், அடுத்த முறை அளவை இரட்டிப்பாக்க வேண்டிய அவசியமில்லை, முன்பு போலவே எடுத்துக் கொள்ளுங்கள்.

**கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட்ஐ உட்கொண்ட பிறகு:**

7 நாட்களுக்குப் பிறகு அறிகுறிகள் தொடர்ந்தால், உங்கள் மருத்துவரை அணுகவும்.

## சாத்தியமான சைடு எபக்ட்ஸ்:

மிகவும் அரிதாக (சிகிச்சையளிக்கப்பட்ட 10,000 நோயாளிகளில் 1 க்கும் குறைவானவர்கள்) இங்க்ரேடிஎன்ட்ஸ்களுக்கு ஒரு ஒவ்வாமை எதிர்வினை ஏற்படலாம். இதன் அறிகுறிகளில் தோல் தடிப்பு, சுவாசிப்பதில் சிரமம், தலைசுற்றல் அல்லது முகம், உதடுகள், நாக்கு அல்லது தொண்டை வீக்கம் ஆகியவை அடங்கும். இந்த அல்லது வேறு ஏதேனும் சைடு எபக்ட்ஸ் ஏற்பட்டால், தயாரிப்பை எடுத்துக்கொள்வதை நிறுத்திவிட்டு உங்கள் டாக்டர் அல்லது பார்மசிஸ்ட்டை அணுகவும். இந்த துண்டுப்பிரசுரத்தில் பட்டியலிடப்படாத ஏதேனும் சாத்தியமான சைடு எபக்ட்ஸ்கள் இதனால் ஏற்படலாம்

**ConsumerHealth_India@reckitt.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் சைடு எபக்ட்ஸ்களை நேரடியாகப் புகாரளிக்கலாம். சைடு எபக்ட்ஸ்களைப் புகாரளிப்பதன் மூலம், இந்த மருந்தின் பாதுகாப்பு குறித்த கூடுதல் தகவலை வழங்க உதவலாம்.

## கேவிஸ்கான் பெப்பர்மின்ட் லிகுய்ட்ஜ எவ்வாறு பத்திரப்படுத்தி வைத்திருப்பது:

அனைத்து மருந்துகளையும் குழந்தைகளுக்கு எட்டாத மற்றும் பார்வைக்கு வெளியே வைக்கவும்.
பேக்கில் காட்டப்பட்டுள்ள எக்ஸ்பிஜரி டேடுக்குப் பிறகு (EXP மாதம்/ஆண்டு) பயன்படுத்த வேண்டாம்.30°C க்கு மேல் பத்திரப்படுத்தி வைக்க வேண்டாம். ரெஃரிஜிரேட் அல்லது பிரீஸ் பண்ண வேண்டாம்.

## மேலும் தகவல்களுக்கு:

ஒவ்வொரு 5 மிலியிலும்: சோடியம் ஆல்ஜினேட் 250 மிகி, சோடியம் பைகார்பனேட் 133.5 மிகி மற்றும் கால்சியம் கார்பனேட் 80 மிகி ஆக்ட்டிவ் இங்க்ரேடிஎன்ட்ஸ் உள்ளன. மற்ற இங்க்ரேடிஎன்ட்ஸ் கார்போமர், மெத்தில் மற்றும் ப்ரோபைல் பாராஹைட்ராக்ஸிபென்சோயேட்ஸ், சோடியம் சாக்கரின், பெப்பெர்மிண்ட் ஆயில், சோடியம் ஹைட்ராக்சைடு மற்றும் நீர்.

இந்த தயாரிப்பில் சர்க்கரை அல்லது குளுட்டன் இல்லை.

**Manufactured by:**
Reckitt Benckiser Healthcare India Pvt Ltd.,
P.O Baddi Dist. Solan-173205 (H.P.), India.

**Marketed by:**
Reckitt Benckiser (India) Pvt. Ltd., DLF Cyber Park,
6th & 7th floor (Tower C), 405 B,
Udyog Vihar Phase III, Sector 20, Gurugram-122016.

Toll Free Number: 18001035012
EMAIL: **ConsumerHealth_India@reckitt.com**